දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.

இசுருபாயா
பத்தரமுல்ல.

"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

මගේ අංකය / எமது இல. / My No. — ED/01/26/2/16/01
தகவல் மற்றும் தொடர்பாடல்
தொழில்நுட்பக் கிளை

දිනය / திகதி / Date — 2006.09.22

சுற்றறிக்கை எண்:- 2006/35

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டப் பொறுப்பு பிரதிக்/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து பாடசாலை அதிபர்கள்

**<u>க.பொ.த (சா.த) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப(O/L-ICT) பாட வினாப்பத்திர மொழிமூலம்</u>**

இலங்கையின் கல்விச் சட்டகத்துக்குள் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தைக் கற்லித்தலின் போதும் பரீட்சைகளை நடாததும்போதும் ஊடக மொழி தொடர்பாக தெளிவுபடுத்துவதே இச்சுற்றறிக்கையின் நோக்கமாகும்.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கல்வி தொடர்பாக இதற்குமுன் வெளியிடப்பட்ட 2005-04-29 திகதிய இலக்கம் 2005/16 யினைக்கொண்ட சுற்றிக்கைக்கேற்ப வெளியிடப் பட்டுள்ள இலக்கம் ED/03/38/2/16/01 யினையும் 2005-05-31 திகதியையும் உடைய அறிவுறுத்தலில் குறிப்பிடப்படடிருந்த 'க.பொ.த(சா.த) பரீட்சையில் இந்த பாடத்தின் வினாத்தாள் ஆங்கில மொழிமூலம் வழங்கப்படும்' எள்ற துற்று இச்சுற்று நிருபம் மூலம் கிழ்வகுமாறு திருத்தம் செய்யப் படுகின்றது.

தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் க.பொ.த(சா.த) கலைத்திட்டத்தில் தொழினுட்ப பாடமாக (O/L-ICT) இன்றுவரை நடைமுறையிலுள்ளது. அதுபோல உயர்தர மாணவர்களுக்கும் பொது தகவல் தொழினுட்ப (GIT) பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

2007 முதல் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரணதர தொழினுட்ப பாட வினாத்தாள் சகல மாணவருக்கும் தமது தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் வழங்கப்படும். தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் சாதாரண பாடங்களைவிட வேறுபட்டது. இதன் கலைச்சொற்களை சிங்களத்தில் அல்லது தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வது குறைபாடுடையதாகலாமாகையால் ஆங்கில மொழிமூல விளக்கத்தை ஊடக மொழிகள் இரண்டிற்கும் பெற்றுக்கொடுப்பதெ இதன் அடிப்படை நோக்கமாகும். இதைக் கவனத்தில் கொண்டு விண்ணப்பதாரியின் பிரதான ஊடக மொழிக்கேற்ப பெறுபேறுகளை வழங்குவதற்கு பரீட்சைத் திணைக்களம் இணங்கியுள்ளது. (உ+தா) விண்ணப்பதாரியின் பிரதான ஊடகமொழி சிங்களமாயின் ஆங்கிலத்தில் வினாப்பத்திரத்துக்கு விடையளித்திருந்தாலும் பெறுபேறு சிங்கள மொழியில்ப் பாடமாகக் கருதியே வழங்கப்படும்)

க.பொ.த(சா.த) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தின் ஊடக மொழி பற்றித் தீர்மானிக்கையில் இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தலிலை பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றேன்.

ஆரியரத்ன ஹேவகே
கல்விச் செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:
- பரீட்சை ஆணையாளர் நாயகம்
- தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளநிலைய பொறுப்பாளர்